2002 ஏப்ரல் 22]

தொகுதியைச் சேர்த்துச் சொல்ல வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சேர்த்துக் கொண்டீர்களேயானால் உங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு அடையாளம் எல்லாம் நன்றாகத் தெரிகிறது. (சிரிப்பு)

வினா எண் 190, திரு. ப. அரசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

190—

ஒன்றியங்களைப் பிரித்தல்

***5946—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஆகிய ஒன்றியங்களைப் பிரித்து முறையே, கீரமங்கலம், நாகுடி என்று புதிய ஒன்றியங்கள் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஆகிய ஒன்றியங்களைப் பிரித்து முறையே கீரமங்கலம், நாகுடி என்று புதிய ஊராட்சி ஒன்றியங்கள் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவரங்குளம் ஒன்றியம் 26 ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட ஒன்றியமாகும். அதைப்போல அறந்தாங்கியும் 26 ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட பகுதி ஆகும். ஏற்கெனவே, தமிழகத்தில் 13, 14 ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட பகுதிகளெல்லாம் தனி ஒன்றியங்களாக இயங்குகிறபோது, இந்த இரண்டு ஒன்றியங்களையும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரசன், 58, 59 எல்லாம் இருக்கிறதே? (சிரிப்பு).

திரு. ப. அரசன்: தலைவர் அவர்களே, அதையும் பிரிக்க வேண்டும். எனவே இந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரிப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கறிவார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது புதுக்கோட்டை மாவட்டம்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: அவ்வாறு தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்பு ஒரு ஊராட்சியையோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தையோ பிரிப்பது என்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து தேர்தல் நடத்துகின்ற சமயத்தில், இன்னும் 4½ ஆண்டு உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் இருக்கிறது. அடுத்து வருகின்ற உள்ளாட்சித் தேர்தலுக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பு, இப்படிப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கின்றபோது, பிரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்டு அரசுக்கு வருகின்றபோது, அதைப் பிரித்தல் தொடர்பாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி இன்னும் 4 வருடங்கள் கழித்துக் கேளுங்கள். அப்புறம் சொல்வார்கள்.

வினா எண் 191, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.